# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2022

### வாசிப்பு – மேற் பிரிவு (5ஆம் 6ஆம் தர மாணவர்கள்)

# பழமொழிகள்

நம் முன்னோர்கள் அநுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மைகளை பழமொழிகளாக வழங்கி வந்தனர். அப்பழமொழிகளை முதுமொழிகள் என்றும் கூறுவர். எடுத்துக்கொண்ட பொருளை வலியுறுத்த பழமொழிகள் பயன்படும். அழகுறக் கூறவும் பழமொழிகள் உதவியாகவிருக்கும். சில பழமொழிகள் கீழே தரப்பட்டுள்ளன.

அகத்தினழகு முகத்தில் தெரியும்.

அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.

அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

ஆனைக்கும் அடி சறுக்கும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

ஊசி போகிற இடம் பார்ப்பார், உலக்கை போகிற இடம் பாரார்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

கண் கண்டது கை செய்யும்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.

சிறுகக் கட்டிப் பெருக வாழ்.

தம்பியுள்ளான் சண்டைக்கஞ்சான்.

நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

விளையும் பயிரை முளையில் தெரியும்.